வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்

வழக்குஎண். CC 77/2020

வழக்குசாட்சி PW10

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ்குமார், உதவி ஆய்வாளர், மணலி காவல் நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ராமசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 38 |

தேதி 12.02.2026

எதிரி1, 2, 3 ஆஜர். 4ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

தகவல் தெரிந்து மருத்துவமனைச் சென்றேன் என்றால் ஆமாம். புகார்தார்ர் சுயநினைவுடன் எந்தவித காயமும் இல்லாமல் இருந்தார் என்றால் சுயநினைவுடன் காயத்துடன் தான் இருந்தார். புகார்தார்ர் எந்த இடத்தில் காயத்துடன் இருந்தார் என்றால் மார்பில் காயத்துடன் இருந்தார். வெளிக்காயமா, உள்காயமா என்றால் வெளிக்காயம் தான். உள்காயம் என்றால் சரியல்ல. வெளிக்காயம் சிராய்ப்பு காயம் என்றால் சரிதான். புகார்தார்ரும் ஆஜர் எதிரிகளும் உறவினர்கள் என்றால் ஆமாம். இருவருக்கும்முன்விரோதம் இருந்து வந்தது என்றால் ஆமாம். இரவு நேரத்தில் தான் சண்டை என்றால் ஆமாம். சீனிவாசன், கார்த்திக் இருவரும் தங்களது கையொப்பத்தினை மறுத்து போலீசார் விசாரணை செய்யவில்லை என்று கூறியுள்ளார்கள் என்றால் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார்கள். சம்பவமே நடக்கவில்லை என்றாலும் முன்விரோதம் காரணமாக பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. எவ்வித காயமும் இல்லாமல் காவல் நிலையத்தில் புகார் அளிக்காமல் மருத்துவமனையில் சேர்ந்து பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. புகார்தார்ர் உறவினர்கள் தான் இவ்வழக்கின் சாட்சிகள் என்றால்

சரிதான். சம்பவ இடத்திற்கு செல்லாமல் பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**